# சாத்தூர் நகராட்சி
## புதிய பாதாள சாக்கடை திட்டம்
## வரைவு புதை வடிகால் இணைப்பு உபவிதிகள்

ந.க.எண்.2053/2006/எம்1

நகராட்சி அலுவலகம்,
சாத்தூர்.
நாள்: 12.12.2023

இதனால் பொதுமக்களுக்கு அறிவிப்பது என்னவென்றால் சாத்தூர் நகராட்சி புதிய பாதாள சாக்கடை திட்டத்தின் கீழ் நகர்பகுதியில் உள்ள வீடுகள், வணிக நிறுவனங்கள், மருத்துவமனைகள், கல்வி நிறுவனங்கள் மற்றும் தொழிற்கூடங்களிலிருந்து வெளியேறும் கழிவு நீரை பாதாள சாக்கடை இணைப்பு குழாய்கள் மூலம் இணைப்புகள் கொடுத்து பராமரிப்பு செய்வது தொடர்பான வரைவு உப விதிகளை சாத்தூர் நகராட்சி நகர்மன்றத்தில் 28.08.2023 ஆம் நாளிட்ட எண்.320 தீர்மானத்தில் அனுமதித்து ஏற்று கொள்ளப்பட்டுள்ளது. அதன் பொருட்டு தமிழ்நாடு நகர்புற உள்ளாட்சி சட்டம் 1998 மற்றும் திருத்திய விதிகள் 2023–ன் படி சாத்தூர் நகராட்சி அலுவலக தகவல் பலகையில் பொது மக்கள் பார்வைக்கு வைக்கப்பட்டுள்ளது மற்றும் சாத்தூர் நகராட்சி இணைதளத்திலும் விளம்பரப்படுத்தப்பட்டுள்ளது. மேற்கண்டவாறு உத்தேசிக்கப்பட்டுள்ள புதை வடிகால் இணைப்பு உபவிதிகள் குறித்து ஆட்சேபணைகள் மற்றும் ஆலோசனைகள் (Suggestions and Objections) தெரிவிக்க விருப்பமுள்ளவர்கள் இந்த விளம்பர வெளியான 30 நாட்களுக்குள் தகுந்த காரணங்களுடன் சாத்தூர் நகராட்சி ஆணையருக்கு எழுத்து மூலமாக தெரிவிக்கலாம் என இதன் மூலம் அறிவிக்கப்படுகிறது.

ஆணையாளர்
சாத்தூர் நகராட்சி

12/12/23